திருமதி ஜோதி வெங்கடாசலம் : வடபழனிக்குப் பக்கத்திலே நிறைய நிலம் காலியாக இருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும்கூட அந்த ஊழியர்களுக்கு விடுகட்டிக்கொடுக்கின்ற முறையிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கோயிலினுடைய நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

கதர் வாரிய அலுவலர்களுக்கு ஓய்வூதியம்

*** 538 வினா—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் துறையில் ஓய்வு பெற்றவர்களுக்கு 'பென்ஷன்' வழங்கப்படுகிறதா ?

(இ) இதுவரை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஒரு நபர்க்கு ஓய்வூதியமும் 38 நபர்களுக்கு தற்காலிக ஓய்வூதியமும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என் கிட்டப்பா : தலைவர் அவர்களே, வழங்கப்படுகின்ற இந்த பென்ஷன் தொகைக்கு மத்திய அரசு ஏதாவது தொகை கொடுக்கிறதா ? அல்லது மாநில அரசே முழுமையும் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே எழுப்பப்பட்ட ஒரு உரிமைப் பிரச்னைக்கு என்னுடைய தீர்ப்பை நான் நாளை தருகிறேன்.